**செய்தி வெளியீடு எண்: 558** **நாள்:30.08.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்திற்கு பி.எஸ்சி தேர்ச்சியுடன் இரண்டு வருட பணி அனுபவம் மற்றும் 35 வயதிற்குட்பட்ட பெண் செவிலியர்கள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள். அதற்கான நேர்முகத்தேர்வு செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ளது. மாதச்சம்பளம் ரூ. 80,000/- முதல் ரூ. 1,00,000/- வரை அனுபவத்திற்க்கேற்ப நிர்ணயிக்கப்படும்.

இந்நிறுவனம் தற்போது இங்கிலாந்து நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு (National Health Service, UK) மருத்துவர்கள், டிப்ளோமா மற்றும் பட்டதாரி ஆண்/பெண் செவிலியர்களை பணியமர்த்தும் பொருட்டு IELTS -ல் இலவச பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. செவிலியர்களுக்கு மாதச்சம்பளம் ரூ 2,00,000/- ஆகும். வயது வரம்பு 22 முதல் 35 வரை.

மேலும் ஓமன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பணிபுரிய 35 வயதிற்குட்பட்டஎலெக்ட்ரிகல் ஐ.டி.ஐ/டிப்ளோமா / பி.இ படிப்புடன் ஐந்து வருட பணி அனுபவம் பெற்ற Substation Electrical Technician, Electrical Engineer, Electrical Technician, Cable Jointer OH Lineman. டிப்ளோமா மெக்கானிக்கல் பிரிவில் தேர்ச்சி பெற்ற ஆப்ரேட்டர்கள் மற்றும் casting finishing supervisorகள் பெருமளவில் தேவைப்படுகிறார்கள்.

மேலே தெரிவிக்கப்பட்ட பணியிடங்களுக்கான சிறப்பு **<u>விழிப்புணர்வு மற்றும் வேலைவாய்ப்புக்கான பதிவு முகாம்</u>** மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோணம், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம் அலுவலகத்தில் 6.9.2019 மற்றும் 7.9.2019(வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை) காலை 9.00 முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது.

இச்சிறப்பு பதிவு முகாமில் பதிவு செய்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி மற்றும் அனுபவ சான்றிதழ், பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் இரண்டு புகைப்படத்துடன் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் பணிக்காலியிடம் மற்றும் பதிவு கட்டணம் குறித்த விவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வலைதளம் மூலமாகவும் www.omcmanpower.com மற்றும் 044-22505886/22502267/ 8220634389/ 9566239685 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு நிறுவனத்தின் முகவர் எண். Rc.No.B-0821/CHENNAI/CORP/1000+/5/308/84 ஆகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**